GCG1-1-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்கு சிறப்பான காரியத்தை வைத்திருக்கிறோம். பிற தேசங்களில் இருந்து நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருப்பவர்களை வரவேற்கிறேன், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய மக்கள். சமீபத்தில் நேயர்களில் சிலர் சொல்வதை கேட்டேன் டெஹ்ரான், ஈரான், ஹாங்காங் மக்கள், சிங்கபூர் மக்கள்,இந்தியாவில் உள்ளவர்கள். இன்னும் பலதரப்பட்ட நேயர்களிடம் இருந்து தகவல்களை பெறுகிறோம் இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து அப்பறம் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து. அதற்கு அப்பறம் ஆப்ரிகாவினர் தென் அமெரிக்காவின் பகுதியில் இருப்பவர்கள். உங்களுக்கு இன்றை சொல்லுகிறேன், நேயர்களே, உங்களோடு தொடர்புகொள்ளும்படியாக தேவன் இந்த மேடையை கொடுத்திருப்பதை நினைத்து பூரிப்படைகிறேன்.

இன்றைக்கு நாம் தெரிந்துகொண்ட தலைப்பு இன்றைய நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருக்கும் 200 நாடுகளில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும். இது சபைக்கு இயேசு கொடுத்திருக்கும் கட்டளையில் பிரதானமானது. தனித்தனியாக ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உரியது. அதைதான் பிரதான கட்டளை என்று சொல்லுகிறோம். இன்றைக்கும், அதை விளக்கும்படியாக, நம்முடைய தேசத்தில் உள்ள பிரசித்திபெற்ற வேதாகம போதகர்களில் ஒருவர் வந்திருக்கிறார், ராபி கேலட்டி. அவர் இதை நமக்கு விளக்கி சொல்லி, தேவனுடைய வார்த்தையிலிருந்து நமக்கு போதித்திடுவார். நிச்சயம் உங்களை உற்சாகபடுத்துவதாக இருந்திடும். உங்களை எழும்பச் செய்வதாக இருக்கும்.

உங்களுக்கு தெரியாத சில வாக்குத்தத்தங்கள் இந்த பிரதான கட்டளையோடு சொல்லப்பட்டிருக்கிறது. நீங்களே வியப்படையும் பல விஷயங்கள் இதில் உள்ளடக்கியுள்ளது அதனால் அந்த தகவல்களை நம்மோடு பகிர்ந்துகொள்ளும் படியாக இவரை அழைத்திருக்கிறேன். சரி, ராபி, இந்த பிரதான கட்டளையானது, இயேசு கிறிஸ்து கூறிய மிகவும் வியப்பான விஷயத்தோடு துவங்குவதாக இருக்கிறது. அது என்ன?

**ராபி கேலட்டி:** சரி, மத்தேயு 28:16-20 தான் பிரதான கட்டளையாக இருக்கிறது. பலரும் இதை அருமையான கட்டளை அல்லது இது ஏற்றுக்கொள்ள கூடியவை என்கின்றனர், இது சிறந்த கருத்து என்றும், சிறப்பான யோசனை என்றும் சொல்லுகிறார்கள். இதை எதற்காக சொல்கிறேன் என்றால், ஜான், அநேக மக்கள், விசுவாசிகளாக, இந்த பிரதான கட்டளையை பின்பற்றுவது கிடையாது. சரி, ஏழரை ஆண்டுகளுக்கு முன்பு நான் இரட்சிக்கப்படாமல் இருந்தேன். நா போதைக்கு அடிமையாயிருந்தேன். மதுபான பிரியனாயிருன்தேன், நா பார்ருக்கு போயிட்டு வந்துட்டு இருந்தேன். ஒருவேளை அப்ப எங்கிட்ட யாராவது வந்து எனக்கு அறிவுரை சொல்லி, “ஒரு விசுவாசியா நீங்க பிரதான கட்டளையை பின்பற்றனுன்னு சொல்லியிருந்தா”, நா அவங்களுக்கு என்ன சொல்லியிருப்பேன்னு தெரியுமா, “தேங்க்ஸ் பட் நோ தேங்க்ஸ்.” ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை போலதான், நீங்க ஒரு விசுவாசியா இருந்தீங்கன்னா, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் வாக்குரைத்திருக்கிறார், அவருடைய கட்டளைகளோடு சேர்த்து அவருடைய வார்த்தையில் நமக்கு வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருக்கிறார். நம்மை கனப்படுத்துகிறார், நமது வாழ்வை மெருகேற்றுகிறார். இதை பற்றிதான் வரப்போகிற சில நிகழ்சிகளில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன், பிரதான கட்டளை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஒரு விஷயம் இருக்கு, உங்க உயரம் 293, 6 அடி 6 அங்குலம், நம்ம இரண்டு பேரும் ஒண்ணா நின்னா நா குள்ள மனிதரை போல தெரிந்திடுவேன். அப்ப உங்களோட டிரைவர் லைசன்ச பார்த்திருக்கேன், அதுல நீங்க பயமுறுத்துகிற தோற்றத்தோடு இருப்பீங்க. எதார்த்தமா வீதிகளில் உங்களை பார்ப்பதற்கு கூட எனக்கு பயமாயிருக்கும். இயேசு கிறிஸ்து உங்க வாழ்க்கையை பாற்றியிருக்கிறார். பார்க்கவே ரொம்ப வித்தியாசமா இருக்கீங்க, ஆல்ரைட்?

விஷயம் இதுதான் நீங்க, சொன்னது சரிதான், இப்போதும் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை குறித்து கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்களுக்கு அவர் கொடுத்திருக்கும் விசேஷித்த கட்டளை. நீங்க

கிறிஸ்தவர் இல்லை என்றால், நீங்க விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்க என்ன சொல்லனுன்னு தெரியுமா, “சரி, நா கிறிஸ்தவனாக மாறிய பிறகு, நா ஆப்ரிகாவிற்கோ இல்ல மற்ற இடங்களுக்கோ போக வேண்டியிருக்கும்.” முதல் விஷயமாக இயேசு கிறிஸ்து தேவன் என்பதை நேயர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறேன். அவர் யார் என்பதையும் நீங்கள் யார் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நீங்க ஒரு பாவி, உங்களை இரட்சிக்க அவர் தேவையாயிருக்கிறார். உங்களுக்காக தமது ஜீவனை கொடுக்கும்படி இந்த பூமிக்கு வந்து உங்களுக்கு அவருடைய இரட்சிப்பை இலவசமாக அருளியிருக்கிறார். உங்க கிரியை எதுவுமில்லை, இது அவர் உங்களுக்கு அருளிடும் ஒரு ஈவு. அவருடைய பிரசன்னம், அவருடைய வல்லமை, அவர் உங்களை மாற்ற முடியும். அவர் உங்களுக்கு நித்திய ஜீவனை அளித்திடுவார், உண்மை இதுதான், இதுதான் அந்த ஈவு. அந்த ஈவை ஏற்றுக்கொண்டவர்கலாக, இருப்பவர்களிடம் தான் இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறோம், அவர்களுடைய இருதயத்தில் அவர்கள் சொல்லுகிற விஷயம், “இயேசு என்ன செய்தார் என்பதை அறிந்திருக்கிறேன். அதை என்னால் ஈடு செய்ய முடியாது, ஆனா அவருக்கு பிரியமாக நடந்திட விரும்புகிறேன். அவருக்கு நன்றிகளை செலுத்துகிறேன் என்பார்கள்.” அப்படிபட்ட நேயர்கள், அப்படிப்பட்ட நேயர்களோடு இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறோம். இயேசு என்ன சொல்லியிருக்கிறார்?

**ராபி கேலட்டி:** வெல், இயேசு இந்த பிரதான கட்டளையை கொடுத்திருக்கிறார்.

மத்தேயு 28:18-20 ல், அவர் சொல்கிறார், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனகுக் கொடுக்கப்பட்டிருகிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுகுக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொல்லும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.” அடுத்த ஆறு நிகழ்சிகளில் நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்றால் பிரதான கட்டளையை பற்றி, ஒவ்வொன்றாக

விளக்கி சொல்ல இருக்கிறேன். அநேகருக்கு இதை பற்றி தெரியும் இதை கேள்விபட்டிருகிரார்கள், ஆனால் பிரதான கட்டளை என்ன என்பதை சரியாக தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். இன்றைக்கும் இந்த அருட்பணியின் பின்னணியை பற்றி சொல்லி ஆரம்பிக்க விரும்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அப்படியே ஆரம்பித்திடுங்கள்.

**ராபி கேலட்டி:** ஓகே. இது சுவாரஸ்யமா இருக்கும் ஏன்னா பிரதான கட்டளையில்,

நான்கு முக்கியமான வார்த்தைகள் உள்ளது. இயேசு பயன்படுத்திய வார்த்தை, எல்லாம்." அவர் சொலும்போது, "எல்லா அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார்." நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் உபதேசியுங்கள்,." சகல இடங்களுக்கும் போங்கள்." அப்பறம் அவர் முடிக்கும்போது இதைதான் சொல்கிறார், " சகல நாட்களிலும் உங்களுடனே இருப்பேன்." என்னுடைய கருத்து என்னன்னா இந்த கட்டளை பற்றி பார்ப்பதற்கு முன்பு, கர்த்தராகிய இயேசு கிர்சிதுவை பற்றி இரண்டு காரியங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். முதல் காரியம் ஏனன்னா: இயேசு கிறிஸ்து, தமது மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல், மூலமா சத்துருவின் மீது வெற்றி சிறந்தார், சாத்தானை வென்றார்.

ரோமர் 5:10 கூறுகிறது, "நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கபட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா.உண்மையில் இங்கு என்ன

சொல்லப்படுகிறதென்றால் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, உண்மையில், தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்றோம், அந்த சமயத்தில் சத்துருக்களாக மாறினோம். தேவனுடைய வழியில் போவதை நாம் விரும்பவில்லை. அப்படி நாம்

சத்துருக்களாக இருக்கும்போது, கிறிஸ்து வந்து நம்மை நேசித்து நமக்காக சிலுவையில் மரித்து நம்முடைய பாவங்களுக்கு விலைகிரையம் செலுத்தினார்.

**ராபி கேலட்டி:** ஆமா. இதில் சுவாரஸ்யமான விஷயம் ஏனன்னா, ரோமர் 8:1-2ல்,

இப்படியாக சொல்லப்படுகிறது, கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் மூலமாக, கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களுக்கு எந்த ஆக்கினை தீர்ப்பும் கிடையாது.” ஏன்? ஏன்னா, “ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலை ஆக்கிற்று.” இது நம்மை ஊக்குவிப்பதாக இருக்கிறது, விசுவாசிகளாக இதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். ஊழியம் அல்லது பிரதான கட்டளையின் அருட்ப்பணிக்குள் நாம் நுழைவதற்கு முன்பு, இந்த அருட்பணியின் பின்னணியை பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இப்ப நா இந்த கிறிஸ்துவின் அதிகாரத்தின் தனித்துவத்தை பற்றி உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி.

**ராபி கேலட்டி:** இப்ப, இதனுடைய தனித்தன்மை வசனத்தின் துவக்கத்திலேயே

அமைத்திருக்கிறது, இயேசு கூறுகிறார், “ வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.” அப்படின்னா, பரலோக பகுதியை மட்டும் முதல்ல பார்க்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ராபி, இந்த வரி ரொம்ப ஆச்சரியமூட்டுவதாக

இருக்கிறது. வானத்தில். அதனுடைய அர்த்தம் என்ன?

**ராபி கேலட்டி:** சரி. எல்லா அதிகாரம் என்று சொல்லும்போது இயேசு தனக்கு

விருப்பமான விதத்தில் பிரியானபடி எதையும்ஸ் எய்வதற்கு அவருக்கு சுதந்திரமும் அதிகாரமும் எப்படி வேண்டுமானாலும் செய்யும் உரிமையும் பெற்றிருந்தார்.

அடிப்படையாக இங்க சொல்லப்பட்டிருக்கிற விஷயம் இதுதான்: வானத்தில் இயேசுவுக்கு இருந்த அதே அதிகாரம் இப்ப பூமியிலும் அவர் பயன்படுத்துகிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால், ஜான், அவர்தான் தேவன் என்கிறார். இது கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை வெளிப்படுத்துகிறது. இதை பவுல் எபேசியர் 1:20ல் விளக்கி சொல்லுகிறார். பவுல் என்ன சொல்கிறார் என்று கவனித்து பாருங்கள், "தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்படி செய்து, எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவரை உயர்த்தினார்." வானத்தில் அவருக்கு இருந்த அதிகாரத்தோடு சேர்ந்து, இந்த வசனத்தில் சொல்லப்பட்டதுபோல, பூமியிலேயும் இயேசுவுக்கு அதிகாரம் இருந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்று கேட்டால் எல்லா சிருஷ்டிகளின் மீதும் இயேசுவுக்கு அதிகாரம் உள்ளது. சரி, இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா என்று எனக்கு தெரியாது, ஆனா புதிய ஏற்ப்பட்டு எழுத்தாளரான, மாற்கு, அவருடைய நேயர்களுக்கு இதை விளக்கி சொல்ல முயற்சித்திருக்கிறார், ஆரம்பத்திலேயே, சுவிசேஷத்தின் துவக்கத்திலே சொல்கிறார், மாற்கு 1:13ல். அவருடைய அதிகாரத்தை எடுத்து காட்ட ஒருசில வசனங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, உண்மையில் இது ஆச்சரியமாக இருக்கிறது.

**ராபி கேலட்டி:** மாற்கு 1:13, இயேசு கூறுகிறார், நேரடியாக பார்க்கும்போது இங்க அவருக்கு மிருகங்கள் மீது அதிகாரம் இருக்கிறது என்கிறார். அந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "அவர் வனாந்தரத்திலே நார்ப்பதுனால் இருந்து சாத்தானால் சோதிக்கப்பட்டு அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துகொண்டிருந்தார்." சரி, பொதுவா ஒரு மனுஷன் மிருகங்களோடு சூழ்ந்திருந்தால், அது நல்ல விஷயமாயிருக்காது. அதாவது, என நடக்குன்னு உங்களுக்கு தெரியும், "சிங்கங்கள், புலிகள் மற்றும் கரடிகள், ஓ, அது, அது ஒரு நல்ல விஷயம் கிடையாது.

ஆனா கிரேக்க பதத்தில் பார்க்கும்போது சொல்லப்பட்டிருக்கிறது வார்த்தை “உடன்” அவர் மிருகங்களுடன் இருந்தார், அவர் மிருகங்களோடு சந்தோஷமாக அமைதியாக இருந்திருக்கிறார் என்று தெரிகிறது.

மிருகங்கள் மீது அவருக்கு அதிகாரம் இருந்ததோடு, தூதர்கள் மீதும் அவருக்கு அதிகாரம் இருந்திருக்கிறது. வசனம் 13ல் அந்த வசனம் என்ன சொல்லுகிறது என்பதை கவனித்து பாருங்கள், “ தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.” நமக்கு தெரியும் எபிரேயர் 2:7, அதாவது மனுஷனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக அவர் படைத்திருக்கிறார். தேவதூதர்கள் இயேசு சுற்றி இருப்பது மட்டுமல்ல, அவருக்கு ஊழியம் செய்கிறார்கள், தூதர்கள் மீது இயேசுவுக்கு அதிகாரம் இருப்பதை காண்பிக்கும் விதமாக இப்படியாயிற்று.

இன்னும் போயிட்டே இருக்கு. போதிக்கும் அதிகாரத்தை இயேசு பெற்றிருந்தார். ஒரு மனிதன் தேவ ஆயத்திற்குள் வருவதையும் இயேசு தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு போதிக்க துவங்கியதும் உங்களுக்கு நினைவிருக்கிறது. அவர்களை நோக்கி அவர், “எது எளிது என்று கேட்டார், இந்த முடவனை பார்த்து, உன் படுக்கையை எடுத்து கொண்டு நட என்று சொல்வதா அல்லது உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதா எது எளிது? மனுஷ குமாரனுக்கு பூமியிலே பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருப்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படி இந்த மனிதனை சுகப்படுத்தினேன் என்பதாக கூறினார்.” பாவங்களை மன்னிப்பதற்கும் இயேசுவுக்கு அதிகாரம் இருந்தது. இங்க அவர் சொல்ல வருவதன் சாராம்சம் என்னவென்றால், “நானே தேவன்.”

இன்னும் போயிட்டே இருக்கு. இயேசுவுக்கு பிசாசுகள் மீதும் அதிகாரம் இருந்தது. –

மாற்கு 1:34. பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி அநேகம் பிசாசுகளை துரத்திவிட்டார் அவை தம்மை அறிந்திருந்தபடியால் அவரிகளை பேசுவதற்கு அவர் இடன்கொடுக்கவில்லை.

ஓய்வு நாளை மீறவும் அவருக்கு அதிகாரம் இருந்தது. ஓய்வு நாளில் அவர் ஒரு மனிதனை சுகப்படுத்தி அதின் மூலம் தமது சீஷர்களுக்கும் பரிசேயர்களுகும் சொன்னது

நினைவிருக்கிறதா, அவர் சொன்னார், “கேளுங்கள், ஓய்வு நாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது, மனிதன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை. மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கு தேவனாயிருக்கார் என்றார்.”

அதிகாரத்தை கொடுக்கவும் அவருக்கு அதிகாரம் இருந்தது. மாற்கு 3 உங்களுக்கு ஞாபகம் இருக்குதா, தம்முடைய சீஷர்களை தம்மிடம் அழைத்தார், அவர்களுக்கு உபதேசிக்கவும் பிசாசுகளை துரத்தவும் அதிகாரத்தை கொடுத்து அனுப்பினார்.

அவர் படவில் இருந்தது நினைவிருக்கிறதா. இயற்கையின் மீதும் அவருக்கு அதிகாரம் இருந்தது. படவுக்கு எதிராக புயல் அதிகமாக இருந்தது, காற்று பலமாக வீசினது, மழை புயல் அதிகமாயிருந்தது திடீரென்று அவர் எழுந்து நின்று கட்டளை கொடுத்தார், “இரையாதே, அமைதலாயிரு.” அப்போது சீஷர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து தங்களுக்குள் சொல்லிக்கொண்டார்கள், “காற்றும் கடலும் இவருக்கு கீழ்ப்படிகிறதே இவர் யாராக இருப்பார்?

இதையெல்லாம் எதற்காக சொல்கிறேன் என்றால், இதைதான் மாற்குவும் சொல்ல முயன்றிருக்கிறார் என்பதை காட்டுகிறேன். இயேசுவுக்கு இயற்கையின் மீது அதிகாரம் இருந்தால், இந்த உலகத்தின் மீது இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் இருக்குமென்றால், இயேசு கிறிஸ்துவுக்கு பிசாசுகள் மீது அதிகாரம் இருக்குமென்றால், நம்முடைய வாழ்வில் இயேசுவை ஏன் நம்பாமல் இருக்கவேண்டும் என்று உங்களுக்கு தோன்றவில்லையா?

அதாவது, எனக்கு ஒரு சுவாரஸ்யமான விஷயத்தை பிரதர் டிம் லீப்லீவர் காட்டினார். டிம் லீப்லீவர் என்னுடைய குருத்துவர்களில் ஒருவர், விசுவாசத்திற்குள் வந்த, ஆதிநாட்களில் என் வாழ்வில் நுழைந்தவர். அவர் சொல்லியிருக்கிறார், “ராபி, தேவனுடைய சர்வத்துவம் என்பது நாடக மேடையின் திரை போன்றது. மேடைக்கு பின்னால் இருக்கும் கருப்பு திரை போன்றது. அது எப்பவுமே அங்கதான் இருக்கும், அதை நீங்க பார்க்கவே மாட்டீங்க.” என்னை பொறுத்தவரை, ஜான், எனக்கு அது அப்படிதான் இருந்திருக்கிறது. தேவனுடைய சர்வத்துவமானது எனக்கு எப்போதுமே ஊக்கமளிப்பதாக இருந்திருக்கிறது

என்ன நடந்தாலும் சரி, நா எங்க போனாலும் தேவன் என்னை எங்கு அனுப்பினாலும் அவர் சகலத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி, இதை கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள்

புரிந்துகொள்ளும்படி இதை விளக்கி சொல்லுங்கள். இது அவர்களுக்கு எப்படி பொருந்தும்? அவங்க என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?

**ராபி கேலட்டி:** சரி, இதை நான் தனிப்பட்ட விதமாக சொல்லுகிறேன். தேவன்

சகலத்தையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருப்பார் என்றால், உண்மையா தை இயேசு மாதிரியாக காட்டியிருக்கிறார், இயேசு கிறிஸ்து எல்லாவற்றிற்கும் தேவனாக இருந்தால், விசுவாசிகளாக நாம் எதற்கு அஞ்சி இருக்க அவசியமில்லை. நாம் தேவனுக்குள் இளைப்பாறிடலாம். நமக்கு தெரியும், எவ்வளவு கடினமாயிருந்தாலும், ஒரு நாளில் எல்லாம் சரியாகிவிடும், தேவனை நம்பினால் மட்டும் போதும். வாழ்க்கை எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் சரி, ஒருநாளில் தேவன் சகலத்தையும் நன்மையாக மாற்றி அமைத்திடுவார். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டியதற்கு என்ன காரணம் என்று கேட்டால்: விசுவாசிகளாக, தேவனுடைய சர்வத்துவத்தை பற்றிய நேர்மறையான கண்ணோட்டம் நமக்கு இல்லாவிட்டால், நம்முடைய வாழ்வின் மீதமுள்ள நாட்கள் முழுவதும் அரைமனதுடன் சோர்வோடு அவருக்காக வாழ்கிறவர்களாக இருந்திடுவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ராபி, தென் அமெரிக்காவில்  ஆவிகளை பற்றி

அதிகம் தியானிக்கிற நேயர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், மெக்சிக்கோ, ஓரியன்டின் பல பகுதிகள் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து சகல ஆவிகளையும் தூதர்களையும் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் அதிகாரம் கொண்டிருக்கிறார், சரியா? அவைகளை குதியுங்கள் என்று சொன்னால், அவை எவ்வளவு உயரம் என்றிடுமா? உண்மை இதுதான் அவர்தான் கர்த்தர், அவர்தான் தேவன்.

ஆல்ரைட், பாவத்திலேயே ஊறியிருக்கும் நேயர்கள், அவங்களுடைய வாழ்க்கையில் பலவித வாழ்க்கையில் பலவித பாவங்கள் இருக்கிறது, இன்றைக்கு வியாதியோடு

இருப்பவர்கள் இருக்கலாம், ஆப்ரிக்காவில் இருப்பவர்களுக்கு அடுத்த வேளைக்கான உணவு எங்கிருந்து வரும் என்று தெரியாமல் இருக்கிறார்கள். உங்களுக்கு உதவும் படி தேவன் பக்கமாக திரும்பிடுங்கள் அவர் மட்டும்தான் உங்களுக்கு உதவிட முடியும். விசுவாசிகளாகிய நம்மை தேவன் நன்றாக பராமரித்திடுவார். நம்முடைய நேயர்களில் பலர் இப்போது சிதறப்பட்ட நிலையில் இருக்கலாம், சரி, ஏதோவொரு விதத்தில் குழப்பத்தில் இருக்கலாம். இயேசு கிறிஸ்துவால் உங்களை இந்த நிலையை கடந்துவர செய்திட முடியும், சரியா?

கடந்த வாரத்தில் கனிய புற்றுநோயால் மரித்துபோய நம்முடைய நேயர் ஒருவருடன் நான் பேசிக்கொண்டிருந்தேன் அவர் மரண படுக்கையில் இருந்த கடைசி சில மணிநேரத்தில் அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர் ஒரு விசுவாசியாக இருந்தார் அவர் சொன்ன விஷயம் வியப்பாக இருந்தது, “பாருங்க, நீங்க தேவனுடைய பிரசன்னத்திற்குள் போக போறீங்க. நீங்க வாழ்வதை நிறுத்திட போவதில்லை, நீங்க தொடர்ந்து வாழ்ந்துட்டுதா இருப்பீங்க அதோடு அது முற்றிலும் அழகான வாழ்க்கையாக இருக்கப்போகிறது, அருமையானது, நீங்க நினைப்பதற்கும் மேலானதாக இருந்திடும். அது வந்துகொண்டிருக்கிறது.” தேவன் தன்னை இந்த நிலையை கடந்திட செய்வார் என்ற நிச்சயத்தோடு சமாதானமாக இருந்ததை பார்க்க வியப்பாக இருந்தது. நேயர்கள் எதை எதிர்கொண்டிருந்தாலும் சரி, இயேசு தேவனாக இருக்கிறார் அதோடு இப்போது நாம் நிறைவு செய்திட விரும்புகிறோம்.

இனி, நாம் மீண்டும் சந்திக்க இருக்கிறோம், இயேசு, தேவனாக, அவருடைய அதிகாரத்தோடு, அவருடைய வல்லமையோடு, நம்மை அனுப்புகிறார். ஆனா அவர் நம்மை அனுப்பினாலும், சீஷனாக இருப்பது என்றால் என்ன என்பதை அவர் மாதிரியாக காண்பித்திருக்கிறார், அவரையும், பிதாவாகிய தேவன் அனுப்பியிருந்தாரே, குமாரன், இந்த உலகிற்கு வந்து தமது பிதாவிற்கு கீழ்ப்படிந்திருந்தார். ஆனா அவர் அப்போஸ்தலர்களை அனுப்பினார் அப்போஸ்தலர்கள் சீஷர்களாக இருப்பதையும் சீஷராக்குவதற்கும் நமக்கு மாதிரியை காட்டியிருக்கிறார்கள். நாம் திரும்ப வந்ததும் அதை பற்றிதான் பார்த்திட இருக்கிறோம். எனவே, இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். நாங்களும் வந்துவிட்டோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாரும் செய்யும்படியாக இயேசு எதிர்ப்பார்க்கிற பிரதான காரியம் என்ன? அது என்னவென்று உங்களுக்கு தெரியுமா? அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். அதை பற்றிதான் நாம் பேசிகொண்டிருக்கிறோம். அவர் நம்மை உலகம் முழுவதும் சென்று சீஷர்களை உருவாக்குங்கள் என்று நமக்கு கொடுத்திருக்கும் கட்டளைக்கு மூலாதாரம் என்னவென்றால் அவருடைய சர்வத்துவம், அவர் சகலத்தையும் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிறார். நமது நிகழ்ச்சியின் முதல் பகுதியில் அதை பற்றி பார்ஹ்தோம். ஆனா, ராபி, எல்லாருக்கும் பிரபல்யமான ஒரு உதாரணத்தை நீங்க வைத்திருக்கீங்கன்னு நினைக்கிறேன், அந்த பறவையை பற்றிய உதாரணம். ஒரு குருவி தரையிலே விழுந்தாலும் அதை பிதா அறிந்தவராக இருக்கிறார். ஆனா நீங்க, கிரேக்கத்தில் இன்னும் சில விஷயங்கள் சொல்லப்படுகிறாதாக சொன்னீங்க, விளக்கமா சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** ஜான், தேவனுடைய அதிகாரத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்.

இது நா என்ன சொல்ல விரும்புகிற விஷயம் இதுதான். இயேசு சகலத்தையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருக்கிறார். மத்தேயு 10ம் அதிகாரத்தில் இதை பற்றி சொல்லியிருக்கிறார், குருவியை பற்றிய உவமையில் சொல்கிறார். வசனம் 29ல் அவர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள், “ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவியை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தம் இல்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.” தேவன் எப்படி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார். குருவி விழுகிறது என்பதை தேவன் அரிந்திருக்கிறார் எனபது மட்டும் அல்ல, அந்த குருவி விழுந்திடும் என்பதையும் தேவன் முன்னறிந்திருக்கிறார், தேவ சித்தம் இல்லாமல் ஒன்றும் நடக்காது என்று இயேசு

கூறுகிறார், அறிந்துகொள்வது மாத்திரமல்ல, ஒரு விசுவாசிகளின் வாழ்விலும் எல்லாவற்றையும் செய்கிறவரும் அனுமதிக்கிரவரும் கட்டுப்பாடிற்குள் வைப்பவருமாக இருக்கிறார். சரி, தேவன் குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினார். நமக்கு அது தெரியும். அதற்கு இயேசு சிறந்த உதாரணமாக இருக்கிறார். இப்ப நமக்கு தெரிந்தபி, புதிய ஏற்ப்பாட்டில் இயேசு அப்போஸ்தலர்களை அனுப்புகிறார். ஆனா அதை நாம் பார்ப்பதற்கு முன்பு, இன்னும் சில நிமிடங்களில் அதை பார்க்கலாம், அதுக்கு முன்னால பிதாவிற்கும் குமாரனுக்கு உண்டான உறவு எப்படி பரிசுத்த ஆவியினால் நிலையாக நடத்தப்படுகிறது என்பதை பற்றி பார்த்திடலாம்.

இதை நாம் பிலிப்பியர் 2:5ல் பார்க்கிறோம், “கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்க கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்.”

திறவுகோல் வார்த்தை இதுதான் – “ஆதலால் தேவன் எல்லாவற்றிருக்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் எஆவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார். “ (பிலிப்பியர் 2:5-11) சரி, இந்த வசனங்களில் இருந்து சுவாரசியமான விஷயத்தை பார்க்கிறோம் – தேவன் தமது குமாரனை அனுப்பினார், ஆவியானவர் மூலம் அனுப்பினார். ஏன்னா இயேசு பிதாவிற்கு கீழ்ப்படிந்திருந்தார், இந்த பிரதாக ஆணைக்கான பின்னணியை பெற்றுக்கொள்கிறோம். இப்ப நம்மையும் பிதாவின் சித்தத்தை செய்யும்படியாக இயேசு அனுப்புகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. அப்படி பார்க்கும்போது, சீஷர்கலாக் ஐருப்பது எப்படி என்பதை நமக்கு இயேசு மாதிரியாக காட்டிய பிறகு நம்மை அவர் அனுப்புகிறார். நமக்கு முன்னால, பார்க்கும்போது, அப்போஸ்தலர்கள் இருந்திருக்கிறார்கள். அந்த அப்போஸ்தலர்களும் மாதிரியை காட்டியிருக்கிறார்கள்.

இப்ப ஒரு கேள்வி, ராபி. இதை கேட்டுக்கொண்டிருக்கிற சில கிறிஸ்தவர்கள் இப்படி கேட்கலாமே, “நா இயேசுவின் கட்டளையையும் பிரதான கற்பனையையும் பின்பற்றும் முடிவை எடுக்க மாட்டேன்.” அநேக கிறிஸ்தவ மக்கள், இந்த நிலையில், இருக்கிறார்கள் என நினைக்கிறேன். இதற்கு சில விளைவுகள் இருக்கிறது. அவற்றுள் சிலவற்றை சொல்லுங்கள்

**ராபி கேலட்டி:** ஆமா, ஜான், கிறிஸ்துவின் கட்டளையை பின்பற்றாதவர்கள் சில விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முதலில் ஜீவனை கொடுக்கும் சுவிசேஷத்தின் செய்தியை புறக்கணிப்பவர்களாக இருப்பார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மைதான்.

**ராபி கேலட்டி:** இந்த உலகத்திற்கு எடுத்து செல்லும்படியாக பிரதான கட்டளையை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். அதோடு கூடவே, இல்லைன்னா நீங்க பரிபூரண வாழ்வை விட்டுவிடுகிறவர்களாக இருப்பீர்கள் என்பதையும் சொல்லுகிறேன். சபை அங்கத்தினர்கள், உலகில் உள்ள விசுவாசிகள், நீங்க தேவனுடைய கட்டளையின் படி செய்யாவிட்டால், தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்க முடியாது, எனபது உண்மை. ஆனா இதற்கு மேல முக்கியமான விஷயமா எனக்கு தோன்றுவது எதுன்னு கேட்டா, இதை பற்றி நாம் அதிகமா பேசுவதே கிடையாது, அதனால நமது பலன்களை இழந்துவிடுகிறோம். மறுமைக்காக நீங்க இம்மையில் எதை செய்கிறீர்களோ அதற்கான பிரதிபலனை இம்மையிலேயே நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்று இயேசு கூறியிருக்கிறார். அதை மத்தேயு 10 அதிகாரத்தில் சொலுகிறார், அதை பற்றி சொல்வதை

பாருங்கள். வசனம் 37 அருமையான வசனமாக் ஐருக்கிறது. இயேசு வார்த்தைகளை கவனியுங்கள், "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனை காக்கிறவன் இழந்துபோவான். என்னிமித்தம் தன் ஜீவனை (வியப்பான விஷயம், அவர் நித்திய ஜீவனை பற்றி சொல்லவில்லை, இங்க வாழ்கிற வாழ்க்கையை பற்றி சொல்லுகிறார்)
இழந்துபோகிறவன் அதைக் காப்பான்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இந்த வார்த்தை, "சூக்கே" இங்கிருக்கிற ஜீவனை குறிப்பதாக இருக்கிறது. அதனால் பரிபூரண ஜீவன், நிறைவு, தேவனுடைய சித்தத்தின் மையத்தில் இருக்க விரும்பினால், இதுதான் அதற்கு ஒரே வழி, கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல். அதை பற்றி நினைக்காமல் இருக்கலாம், ஆனா உங்கள் வாழ்க்கையில் தேவன் நீங்கள் செய்யும்படி விரும்புகிற காரியங்களை நீங்கள் அறிந்துகொள்ளும்படி செய்வது இதுதான் எனபது மறுக்க முடியாத உண்மை. இதை பற்றி நிச்சயம் ஒரு நிகழ்ச்சி முழுவதும் நாம் பேச இருக்க்ரிஒம், இதுவரைக்கும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பை பற்றி பார்த்திடுவோம். சபையின் 75 சதவிகிதம், கிறிஸ்தவ சபை, கிறிஸ்தவர்களாக நமது சபையில் உட்கார்ந்திருக்கும் நபர்கள், அவர்கள் பரிபூரணமாக இருப்பதுபோல் உணர்வதில்லை. தங்கள் கிறிஸ்தவ வாழ்வில் பின்னோக்கி செல்வதாக உணருகிறார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது அது பிணைக்கப்பட்டிருக்கிறது, இங்கதான்னு நினைக்கிறேன், நமக்கு இயேசு கொடுத்த பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிதல். அதற்கான விளைவுகள் இருக்கிறது. அவங்க கைவிடப்பட்டவர்களாக இருப்பதில்லை, பரலோகத்திற்கு போவதில்லை என்று சொல்லப்படவில்லை. நீங்க பரலோகம் போவீங்க. ஆனா தேவனுடைய கிருபையினால அங்க போவீங்க. இருந்தாலும், இந்த விஷயத்துல இயேசுவுக்கு செவிகொடுக்காததால நீங்க பாத்திரமான ஊழியனாக கருதப்பட

மாட்டீர்கள். உங்கள் பலன்களை இலந்திடுவீர்கள். ஆனா, இன்னும் மற்ற காரியங்களும் இருக்கு, ராபி, அது என்னென்ன?

**ராபி கேலட்டி:** சரி, இயேசுவும் அதை நமக்கு வசனத்தில் காட்டியிருக்கிறார், இந்த பின்னிணை பாருங்கள், அதிகாரமுடைய செய்தி. அவருக்கு அதிகாரம் மட்டும் கிடையாது. அதிகாரப்பூர்வமான செய்தியையும் இயேசு வைத்திருந்தார். இயேசு சொல்கிறார், “நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னையன்றி ஒருவனும் பிதாவினிடம் சேர முடியாது.” அதாவது விமானத்தில் பயணித்த மக்களை பார்த்ஹ்டிருக்கிரேன், நா பள்ளியை முடித்து போகும்போதும் வரும்போதும், சுவிசேஷத்தை அவர்களோடு பகிந்துகொண்ட பிறகு, அவங்க என்ன சொல்வாங்க தெரியுமா, “ராபி, இது குறுகிய கண்ணோட்டமா இருக்குது. இயேசுதான் ஒரே வழி என்று சொல்வது குறிகிய பார்வை.” அவர்களுக்கு இயேசுவின் வார்த்தைகளை கொண்டே பதில் சொல்லுவேன். இயேசு சொல்கிறார், “கேட்டுக்கு போகிற பாதை அகலமும் விசாலமுமானது, ஆனா ஜீவனுக்கு செல்லும் பாதை வழி இடுக்கமும் குறுகலுமானது அதை கனுபிடிப்பவர் சிலர்.” இயேசுவும் அவருடைய எண்ணங்களில் குறுகிய மனப்பான்மையோடு இருந்திருக்கலாம்.

எனவே, இயேசுதான் அதிகாரப்பூர்வமான செய்தி என்றால், புத்தருடைய செய்தி அதிகாரப்பூர்வமானது கிடையாது என்று அர்த்தமாகும். அப்படின்னா ஹரே கிருஷ்ணா அதிகாரபூர்வமான சித்தி அல்ல. அதற்கு அர்த்தம் முகமது, இஸ்லாமியம், அவங்ககிட்டயும் அதிகாரப்பூர்வமான செய்தி இல்ல. மார்மன்ஸிடம் அதிகாரப்பூர்வமான செய்தி இல்லை. யேகோவா விட்னஸ் அதிகாரப்பூர்வமானது கிடையாது. விசுவாசிகளாக, நமக்கு, மெய்யான அதிகாரப்பூர்வமான செய்தி இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி, சீஷர்களாக இருப்பது என்ன என்பதற்கு நமக்கு இருக்கும் மற்றொரு பெரிய உதாரணம் அப்போஸ்தலர்கள், அவர்கள் அதன் பிரதிபலன்கலாக இருக்கிறார்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா, கிறிஸ்துவின் அதிகாரத்தின் பிரதிபளிப்பிற்கு சிறந்த உதாரணமாக இருப்பது அப்போஸ்தலர்களின் வாழ்க்கை என்று நினைக்கிறேன். யோவானை தவிர கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றிய அனைத்து அப்போஸ்தலர்களும், மரித்தார்கள். இந்த நபர்களுடைய வாழ்க்கையில் சம்பவித்தத்தை பற்றி துரிதமாக உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, யாக்கோபை பற்றி பார்க்கலாம், செபதேயுவின் குமாரன். அவர்தான் யோவானின் மூத்த சகோதரன். அகிரிப்பா எரோதினால் தலை துண்டிக்கப்பட்டான். லீஸ்தியனான யாக்கோபு, இவர் இயேசுவின் சகோதரனாவார், நிருபத்தை எழுதியவர், வரலாறு கூறுகிறது அவரை கோபுரத்தின் மேலிருந்து வீசினார்கலாம், இருந்து அவர் மரிக்காதத்தினால் அவருடைய தலையை நசுக்கி அவரை கொன்றிருக்கிறார்கள்.

அந்திரேயா, பேதுருவின் சகோதரன், பாரம்பரியம் கூறுகிறது இயேசு மரித்த அதே விதத்தில் தான் மரிப்பதற்கு பாத்திரனல்ல என்று அவர் நினைத்ததால் அவரை எக்ஸ் வடிய சிலுவையில் ஆராய்ந்தார்களாம். தோமா கோபம் நிறைந்த பாகான்களால் துன்புருத்தப்பட்டாட். அவருடைய விழாவில் அவரை குத்தி பிறகு எண்ணெய் கொப்பறைக்குள் அவரை தூக்கி எரிந்தார்கலாம். மத்தேயு, சரித்திரம் கூறுகிறது அவர் எத்தியோப்பியாவில் மரித்தாராம். அவரை தரையோடு சேர்த்து ஆணியடித்து பிறகு தலையை துண்டித்து கொன்றார்களாம். மாற்கு, சரித்திரம் கூறுகிறது, புதிய ஏற்ப்பாட்டின் ஆசிரியரான இவர், குதிரைகளில் கட்டப்பட்டு துண்டு துண்டாக பியிந்து போடப்பட்டார். பேதுரு இரத்த சாட்சியாக சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டார். கர்த்தர் மரித்த அதே விதத்தில் மரிக்க இவர் விரும்பாதிருந்தார். இயேசுவுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை இவர்கள் எல்லாரும் புரிந்துகொண்டார்கள், இந்த ஜீவியத்தில் மட்டும் அல்ல, வரப்போகிற ஜீவியத்தியலும் அதிகாரமுண்டு. அதனால் அவர்கள், அப்போஸ்தலனாகிய பவுலை போல, “கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்றனர்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அவர்களுடைய வாழ்நாட்களில், தேவன் அற்புத விதமாக அநேகரை விடுவித்தார். அப்போஸ்தலனாகிய பவுலை பற்றி யோசித்து பாருங்கள், பரலோகம் செல்கிற நாள் வரைக்கும் அவர், தேவனால் பல விதங்களில் பாதுகாக்கப்பட்டார். தேவன் நம்மை பாதுகாத்திடுவார். இதுவும் செய்தியின் ஒரு பகுதி என்று நான் நம்புகிறேன். ஆனால் தேவனுடைய சர்வத்துவம் என்று பார்க்கும்போது, இந்த நிகழ்ச்சியில் இருந்து மக்கள் எதை பிடித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

**ராபி கேலட்டி:** சரி, கேள்வி இதுதான், உங்க வாழ்க்கையில் கேட்ட காரியங்கள் நடக்கும் போது நீங்க என்ன செய்யப்போறீங்க? தேவனுடைய சர்வத்துவத்தை பற்றி ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டம் உங்களுக்கு அவசியம். எல்லாவற்றையும் தேவன் ஆளுகை செய்கிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு மருத்துவருடைய அறைக்குள் போகும்போது நீங்கள் எதிர்பார்க்காத செய்திகளை அவர்கள் சொல்லிடுவார்கள். உங்க மகன் அல்லது மகளுடைய விபத்தை பற்றி கேள்விபடும்போது, தேவனுடேய சர்வத்துவத்தை நம்பாவிட்டால் அதை தவிர நீங்க வேறு என்ன செய்ய முடியும்? அதாவது, ஜான், பல வருடங்களுக்கு முன்னால நானும் என் மனைவியும், தேவுடைய ஊழியத்தில் தேவனை பின்பற்றிகொண்டிருந்தோம். சூறாவளி கேத்ரீனா, பெரிய புயல், எங்க நகரத்தை சூழ்ந்தது. எங்க வீட்டுல எட்டடி உயரத்துக்கு தண்ணீ இருந்தது. எல்லாவற்றையும் இழந்தோம். அதாவது இயற்கை நியதிப்படி நமக்குள்ள எழும் கேள்வி, :தேவனே, எனக்கு எதற்காக? உங்களுக்கு தான் ஊழியம் செய்கிறோம், உங்களைதான பின்பற்றுகிறோம்.” ஆனா அந்த பாதையை தேவன் எங்களை கடக்க செய்தார். தீமையான காரியங்களுக்கு தேவன் நம்மை விளக்கிடுவார் என்றிருந்தாலும், நமது வாழ்வின் அந்த கட்டத்தை கடந்து வரும்போது அவர் நம்மோடு இருப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார் என்பதையும் தவிர்க்க முடியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அருமையாக சொன்னீர்கள். சரி, நேயர்களே, அடுத்த வாரம், உங்களுக்கு தெரியுமா புள்ளி விபரத்தின் படி இருபத்தி நாண்டு சதவிகித கிறிஸ்தவர்கள் தேவனுடனான தங்கள் நடக்கையில் பின்மாற்றத்தை பார்ப்பதாக கூறியிருக்கிறார்கள். நாற்பத்தி ஒன்று சதவிகிதத்தினர் தேவனுடனான அவர்கள் உறவு அசைவில்லாமல் இருக்கிறது என்கின்றனர். அதற்கு அற்ஹ்த்தம் இப்போது சபையில் உள்ளவர்களில் 75 சதவிகிதத்தினர், சபை அங்கத்தினர்களில் நான்கி மூன்று பேர், பின்மாற்றத்தை காண்கிறார்கள் அல்லது அசைவில்லாமல் இருக்கிறார்கள், ஏன்? அடுத்த வாரம் அதை பற்றி பார்த்திட இருக்கிறோம், இதுவும் பிரதான கட்டளையின் பதில்களில் ஒரு பங்காக இருக்கிறது. இது பயங்கரமான காரியம், நேயர்களே. இதை தவற விட்டுவிட வேண்டும். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.